RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-26 | 26 ஜனவரி | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## திருப்பரங்குன்றம் மலைக்கு செல்லவிருந்த வேலூர் இப்ராஹிம் கைது: போலீஸுடன் பாஜகவினர் தள்ளுமுள்ளு

மதுரை , ஜன.26

திருப்பரங்குன்றம் மலைக்கு செல்லவிருந்த பாஜக சிறுபான்மையினர் அணியின் தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிமை போலீஸார் கைது செய்தனர். அதற்கு பாஜகவினர் எதிர்ப்பு தெரிவித்ததால் பாஜகவினருக்கும் போலீஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.



மதுரை திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள பள்ளிவாசலில் வழிபாடு செய்வதற்காக பாஜக சிறுபான்மையினர் அணி தேசியச் செயலாளர் வேலூர் இப்ராஹிம் இன்று (சனிக்கிழமை) காலையில் செல்லவிருந்தார். அப்போது ஜெய்ஹிந்த்புரத்தில் விடுதியில் தங்கியிருந்தவரை மலைக்கு செல்லக்கூடாது என போலீஸார் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் போலீஸாருக்கும் பாஜகவினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது பணியிலிருந்த உதவி ஆணையர் சூரக்குமாரிடம், மலைக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என பாஜகவினர் கோரிக்கை விடுத்தனர். அப்போது, வேலூர் இப்ராஹிம், ராமநாதபுரம் எம்பி நவாஸ்கனியின் புகைப்படம் மீது காலணியால் அடித்தார். பின்னர் போலீஸார் வேலூர் இப்ராஹீமை கைது செய்தனர். அவரை விடுவிக்கக்கோரி போலீஸாருக்கும், பாஜகவினருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் பாஜகவைச் சேர்ந்த இருவரை போலீஸார் கைது செய்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் வேலூர் இப்ராஹீமை விடுவிக்கக்கோரியும் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய வாசலில் அமர்ந்து பாஜகவினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தி கலைந்துபோகச் செய்தனர். இதனால் ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப் பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பு நடத்த தடை!

சென்னை, ஜன.26

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வாக்குப் பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பு நடத்துவதற்கும் அதை வெளியிடுவதற்கும் தடைவிதித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.




இதுதொடர்பாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஈரோடு (கிழக்கு) சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு பிப்ரவரி 5ம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். இந்த இடைத்தேர்தலின்போது, வாக்குப்பதிவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக் கணிப்புகளின் முடிவுகளை வெளியீடுதலுக்கும் பரப்புதலுக்கும் பின்வரும் வரையறைகள் பொருந்தும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது: 1951ம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, எந்த நபரும் வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவதோ மற்றும் அதை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவதோ அல்லது வேறு ஏதேனும் முறையிலோ பரப்பக் கூடாது.

தேர்தல் ஆணையம், ஒரு பொது ஆணைப்படி, பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு தேதி மற்றும் நேரத்தை அறிவிக்கும். அதாவது, ஒரு பொதுத் தேர்தலின் போது, வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வாக்குப்பதிவு முடிந்தபின் அரை மணிநேரம் வரை தொடரலாம்.

ஓர் இடைத்தேர்தல் அல்லது பல இடைத்தேர்தல்கள் ஒன்றாக நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல் மற்றும் வாக்குப்பதிவின் முதல் நாளிலிருந்து வாக்குப்பதிவு முடிந்தபின் அரை மணிநேரம் வரை தொடரலாம். பல இடைத் தேர்தல்கள் வெவ்வேறு நாட்களில் ஒன்றாக நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல், கடைசி வாக்குப்பதிவு முடிந்த அரைமணி நேரம் வரை தொடரலாம்.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை மீறுவோருக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும் என தேர்தல் ஆணையத்தால் கூறப்பட்டுள்ளது. எனவே, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் பிப்ரவரி 5ம் தேதி (புதன்கிழமை) காலை 7 மணி முதல் மாலை 6.30 மணி வரை, வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவது மற்றும் அதை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது தடை செய்யப்பட வேண்டிய கால அளவாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இடைத்தேர்தல் வாக்குப்பதிவு முடிவடைவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்துடன் முடிவடைகின்ற 48 மணி நேர கால அளவில் ஏதேனும் கருத்துக் கணிப்பு அல்லது பிற வாக்குப் பதிவு ஆய்வு முடிவுகள் உட்பட, எந்தவொரு தேர்தல் விவகாரங்களையும், எந்தவித மின்னணு ஊடகத்தில் காட்சிப்படுத்துவது தடை செய்யப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## குடியரசு தின விழாவையொட்டி காட்பாடி இரயில் நிலையத்தில் போலீசார் தீவிர பாதுகாப்பு பணி - உடைமைகள் சோதனை

வேலூர் ஜன.26

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி ரயில் நிலையத்தில் பாதுகாப்பு சோதனை, வருகிற ஜனவரி 26ம் தேதி நாடு முழுவதும் 76வது குடியரசு தின விழா, நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது இதனையடுத்து வேலூர் மாவட்டத்தில் முக்கிய பகுதிகளில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



காட்பாடி ரயில் நிலையத்தில் காட்பாடி ரயில்வே பாதுகாப்பு படை காவல் ஆய்வாளர் காவல் ஆய்வாளர் அழகர்சாமி, ரயில்வே இருப்பு பாதை காவல் ஆய்வாளர் ருவாந்திகா, ஆகியோர் தலைமையிலான போலீசார் இணைந்து ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகளின் உடைமைகளை தீவிரமாக மெட்டல் டிடெக்டர் கருவிகள் மூலம் சோதனை மேற்கொண்டனர்.

காட்பாடி மார்கமாக இரயில்களில் செல்லும் பயணிகளின் உடைமைகளை மெட்டல் டிடெக்டர் கருவிமூலம் சோதனை நடத்தி வருகின்றனர். முன்னதாக காட்பாடி இரயில்வே நிலைய வாயிலில் உள்ள எக்ஸ்ரே பேக்கேஜ் ஸ்கேனர் கருவி மூலம் சோதனை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனையில் போலீசார் சுழற்சி முறையில் வரும் 26 ஆம் தேதி குடியரசு தினம் முடியும் வரையில் போலீசார் ரயில் நிலைய வளாகத்திலும் ரயில்களிலும் சோதனை மேற்கொள்ள உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

## வேங்கைவயல் சம்பவம் குறித்து தவறான தகவல்களைப் பரப்ப வேண்டாம்: தமிழக அரசு

சென்னை, ஜன.26

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் சம்பவத்தில், தனிப்பட்ட விரோதம் காரணமாகவே 3 பேர் இக்குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து தவறான தகவல்களைப் பரப்பிட வேண்டாம் என தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.



இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை விவரம்: புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்களுக்கான மேல்நிலை குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டதாக கடந்த 2022 டிசம்பர் மாதம் புகார்கள் எழுந்தன.

இக்கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிலர் வாந்தி மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகவும், காவேரி நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் அதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மீது ஏறிப் பார்த்ததில், மேல்நிலை நீர்த்தேக்க நீரில் மலக்கழிவுகள் மிதப்பதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து, இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், வெள்ளானூர் காவல் நிலைய சிகுஎ.ஙிஷீ.239/2022ல் 26.12.2022 ஆம் தேதி வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் தீவிரத்தையும், சமூக முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் இவ்வழக்கின் புலன் விசாரணையை 14.01.2023 அன்று தமிழ்நாடு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றினார். அதைத் தொடர்ந்து, கூடுதல் காவல் துறை இயக்குநர், குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை உத்தரவின் பேரில், துணைக் காவல் கண்காணிப்பாளர் நிலையிலான அதிகாரியை புலனாய்வு அதிகாரியாக நியமித்து, புதுக்கோட்டை குற்ற எண்.01/2023ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணையின்போது, புகார்தாரர் மற்றும் அவரது உறவினர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டதோடு, ஏராளமான ஆவணங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதைத் தவிர, பல நபர்களின் அலைபேசி எண்கள் மற்றும் தொலைத் தொடர்பு தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. வேங்கைவயல், எறையூர் கிராம மக்களிடம் இதற்கான பல்வேறு காரணங்கள் குறித்தும் விரிவாக விசாரிக்கப்பட்டது. மேலும், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில நபர்களிடமிருந்து உயிரியல் மாதிரிகள் எடுக்கப்பட்டு, விரிவான டி.என்.ஏ பகுப்பாய்வும் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை மற்றும் பகுப்பாய்வுகளின் அடிப்படையில், பின்வரும் விவரங்கள் உறுதி செய்யப்பட்டன:

சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, 02.10.2022 அன்று வேங்கைவயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு குறித்து கேள்வி எழுப்பியதற்காக முத்துக்காடு ஊராட்சித் தலைவர் பத்மா என்பவரின் கணவர் முத்தையா என்பவர் கிராமசபைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு காவல் துறை ஆயுதப்படைப் பிரிவில் பணியாற்றும் காவலர் முரளிராஜாவின் தந்தை ஜீவானந்தம் என்பவரை அவமானப்படுத்தும் விதமாகத் திட்டியுள்ளார். இச்சம்பவத்திற்கு பழிவாங்கும் வகையில் முரளிராஜாவால் இச்செயல் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டது என்பது காவல் துறையின் விசாரணையின் மூலம் ஆதாரபூர்வமாக புலனாகியுள்ளது.

மேலும், இச்சம்பவத்தில் முரளிராஜா, சுதர்ஷன், முத்தையா, ஆர்.முத்துகிருஷ்ணன் மற்றும் பலரின் கைப்பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு, தமிழ்நாடு தடய வியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது, அவற்றில் இந்தச் சம்பவம் தொடர்பான பல புகைப்படங்களும், உரையாடல்களும் அழிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இந்தத் தகவல்கள் அனைத்தும் தொழில்நுட்ப உதவியோடு மீட்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில், இச்சம்பவத்தில் அவர்களுக்குள்ள தொடர்பு உறுதிசெய்யப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையில் பெறப்பட்ட புகைப்படங்கள், செல்போன் உரையாடல்கள், வீடியோ ஆதாரங்கள், தடயவியல் அறிக்கை, மருத்துவ அறிக்கைகள், புலனாய்வு அதிகாரியால் செய்யப்பட்ட செயல்முறை விளக்கங்களின் முடிவுகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அறிக்கை, வல்லுநர்களின் கருத்துகள் மற்றும் சாட்சிகளின் அறிக்கைகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்ததின் அடிப்படையில், புலன் விசாரணை முடிக்கப்பட்டு முரளிராஜா, வேங்கைவயல், சுதர்ஷன் 20/23, வேங்கைவயல் மற்றும் முத்துகிருஷ்ணன், வேங்கைவயல் ஆகியோரின் மீது, 20.01.2025 அன்று நீதிமன்றத்தில் சிபிசிஐடி சார்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இதுதொடர்பாக தவறான தகவல்களை யாரும் பரப்பிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "வேங்கைவயல் வழக்கில் சிபிஐ விசாரணையை இந்திய கம்யூ. கோரவில்லை" முத்தரசன்

தருமபுரி, ஜன.26

வேங்கைவயல் விவகாரம் தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிபிஐ விசாரணை கோரவில்லை என அக்கட்சியின் மாநிலச்செயலாளர் முத்தரசன் கூறியுள்ளார்.



தருமபுரியில் இன்று (ஜன.26) தொடங்கி 3 நாட்களுக்கு நடக்கவுள்ள அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 18வது மாநில மாநாட்டில் பங்கேற்க தருமபுரி வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் இன்று (ஜன.25) செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "ஜனவரி 26, அரசியலமைப்புச் சட்டத்தை நாடு ஏற்றுக் கொண்ட நாள். அரசிலமைப்புச் சட்டத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள இந்த காலகட்டத்தில் அதை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜனவரி 26ல் இளைஞர் பெருமன்ற மாநாட்டை தொடங்கி நடத்த திட்டமிட்டுள்ளோம்.

ஆர்எஸ்எஸ்ஸின் அரசியல் பிரிவான பாஜக, மூன்றாவது முறையாக மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்துள்ளது. அரசியலமைப்பு சட்டத்தை தொட்டு வணங்ககூடிய பிரதமர் நரேந்திர மோடி, அதை நடைமுறையில் பின்பற்றவில்லை. மாறாக மனுதர்ம ஆட்சியைதான் அவர்கள் முன்வைக்கின்றனர். ஒரே நாடு ஒரே தேர்தல், தேசிய கல்விக் கொள்கை சட்டம் போன்றவை அதன் வெளிப்பாடுகள். இறுதியாக 'ஒரே கட்சி ஒரே ஆட்சி' என்ற நிலையை ஏற்படுத்துவது அவர்களின் நோக்கம். சர்வாதிகார நிலையை நோக்கி நம் நாட்டை நகர்த்தி வருகின்றனர். அதை தடுக்கவே இந்த மாநாடு நடத்தப்படுகிறது. மாநாட்டில் இது தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. வேலையின்மை என்ற பிரச்சினை நாட்டை இன்று கொதிநிலையில் வைத்திருக்கிறது. இதுவிரைவில் கொந்தளிக்கக் கூடும்.

வேங்கைவயல் கிராமத்தில் குடிநீர் தொட்டியில் மனிதக் கழிவை கலந்த விவகாரம் தொடர்பாக தற்போது 3 பேரின் பெயரை காவல்துறை வெளியிட்டுள்ளது. இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சிபிஐ விசாரணை வேண்டும் என விசிக, சிபிஎம் கட்சியினர் கோரியுள்ளனர். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிபிஐ விசாரணை கோரவில்லை. வழக்கின் போக்கினை பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழக ஆளுநர், ஆளுநராக நடந்து கொள்ளாமல் ஆர்எஸ்எஸ்ஸின் கைப்பாவையாக செயல்படுகிறார். கண்ணியம் மிக்க இந்த பதவியில் இருந்து கொண்டு ஆளுநர் இவ்வாறு செயல்படுவது அழகல்ல. தன் பதவியை ராஜினாமா செய்து விட்டு வேண்டுமானால் ஆர்எஸ்எஸ் அல்லது பாஜகவில் இணைந்து அவர் செயல்படலாம். ஆளுநர் வாயை திறந்தாலே தமிழகத்தில் பிரச்சினை ஏற்படுகிறது. வள்ளுவர் மீது மதச் சாயம் பூசியவர் ஆளுநர். அவர் அழைப்பு விடுத்த தேநீர் விருந்தை, ஜனநாயகத்தையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் காக்க விரும்பும் அரசியல் கட்சியினர் ஏற்கமாட்டார்கள். நாங்களும் அந்த விருந்தை புறக்கணித்துள்ளோம் என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியின்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணைத் தலைவர் பெரியசாமி, தமிழ்நாடு பழங்குடியின மக்கள் சங்க மாநில கவுரவ தலைவர் நஞ்சப்பன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் சிவபுண்ணியம், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தேவராசன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கலைச்செல்வம் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக 'நெகிழி கழிவு சேகரிப்பு திட்டம்' தொடர்பாக கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து பங்கேற்றார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பேரணியில் பங்கேற்ற மாணவ மாணவியர்கள் அனைவரும் 'நெகிழி பயன்பாடு எதிர்ப்பு' விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். உடன் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் குணசீலன் உள்ளார்.

# மும்பை தாக்குதல் குற்றவாளி தஹவ்வூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்க சுப்ரீம் கோர்ட் இசைவு

வாஷிங்டன், ஜன.26

மும்பை தாக்குதல் வழக்கு குற்றவாளி தஹவ்வூர் ராணா இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்க சுப்ரீம் கோர்ட் அனுமதி அளித்துள்ளது. ராணாவை நாடு கடத்த இந்தியா கோரியுள்ள காரணங்களில் முகாந்தரம் உள்ளதால் அவரை நாடு கடத்த உச்ச நீதிமன்றம் சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது.

கடந்த 2008ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி கடல் வழியாக மும்பைக்குள் புகுந்த லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

உலகையே உலுக்கிய இந்த தாக்குதலில் 166 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதில் 6 அமெரிக்கர்களும் அடங்குவர். மேலும் 300க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதி அஜ்மல் கசாப் மட்டும் போலீஸாரால் உயிரோடு பிடிக்கப்பட்டார். பின்னர் அவர் தூக்கிலிடப்பட்டார்.

இந்நிலையில் மும்பை தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தானை பூர்வீகமாக கொண்ட தீவிரவாதி தஹவ்வூர் ஹுசைன்



ராணா அமெரிக்காவில் கடந்த 2009ல் பிடிபட்டார். மும்பை தாக்குதல் விவகாரத்தில் பாகிஸ்தான் தீவிரவாதி டேவிட் ஹெட்லியுடன் சேர்ந்து, கனடா குடியுரிமை பெற்ற பாகிஸ்தான் தொழில் அதிபர் ராணா சதித்திட்டம் தீட்டியது தெரிய வந்தது.

இத்தாக்குதலில் முக்கிய குற்றவாளியாக சந்தேகிக்கப்படுபவர் தஹவ்வூர் ராணா. அமெரிக்க சிறையில் உள்ள ராணாவை இந்தியாவுக்கு கொண்டு வந்து விசாரணை நடத்த ராஜீய ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. இந்தியாவின் கோரிக்கைக்கு அமெரிக்க அரசும் ஆதரவு தெரிவித்திருந்தது. இந்நிலையில், அமெரிக்க உச்ச நீதிமன்றம் இன்று இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

முன்னதாக, ராணா தன்னை இந்தியாவுக்கு நாடு கடத்துவதை தடுக்க கோரி சான் பிரான்சிஸ்கோவில் உள்ள கீழமை நீதிமன்றங்களை நாடினார். ஆனால், அவரிக் கோரிக்கையை ஏற்க அவை மறுத்துவிட்டன. இந்த நிலையில், இறுதி முயற்சியாக அவர் உச்ச நீதிமன்றத்தை நாடினார். ஆனால் அவரின் கோரிக்கையை ஏற்க கூடாது என தற்போது அமெரிக்க அரசே பதில் மனு தாக்கல் செய்தது.

அமெரிக்க அரசின் கோரிக்கையை ஏற்று உச்ச நீதிமன்றம் ராணாவின் நாடு கடத்துவதை தடுக்க கோரும் மனுவை தள்ளுபடி செய்துள்ளது. குற்றவாளிகளை பரஸ்பரம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே ஏற் கெனவே அமலில் உள்ள நிலையில், அதன் அடிப்படையில் ராணா நாடு கடத்தப்படுகிறார். ராணா விரைவில் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட வாய்ப்புள்ளது.

# காட்பாடி தாலுகாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு முகாம்






வேலூர் ஜன.26

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பி.டி.ஒ. அலுவலக வளாகத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான அனைத்து துறைகள் ஒருங்கிணைந்த சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் சுப்பு லெட்சுமி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் மாநகராட்சி மேயர், துணை மேயர் சுனில்குமார், காட்பாடி 1வது, மண்டல தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, வன்னிய ராஜா புஷ்பலதா,

மாமன்ற உறுப்பினர்கள் சித்ரா லோகநாதன், அன்பு, டீட்டா சரவணன், கிள்த்தாம்பட்டறை விநாயகம் மற்றும் மக்கள் பிரதி நிதிகள், மாற்றுத் திறனாளிகளின் நலத் துறை அலுவலர் சரவணன்

மற்றும் மாவட்ட அளவில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு கனிவுடன் அவர்களின் கோரிக்கைகளை பெற்று இந்த சிறப்பு முகாமில் நற்சேவை புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்லாவரத்தில் மறைமலை அடிகள் அரசினர் மேல்நிலை பள்ளியில் உள்ள இளைய கலாம் அறிவியல் மைய நிகழ்ச்சி




பல்லாவரம் ஜன26

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் உள்ள மறைமலை அடிகள் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள இளைய கலாம் அறிவியல் மையத்தால் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளி மாணவர்களுக்கு மாபெரும் அறிவியல் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டது.

இளைய கலாம் அறிவியல் மையம் 2021 ஆம் ஆண்டு HCL Foundation & SEDT ஆல் உருவாக்கப்பட்டது.

இதில் வரையில் 20,000 மேற்பட்ட மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர், 20242025 ஆண்டிற்கான இளைய கலாம் அறிவியல் திருவிழா சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த அரசு பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டது, இதில் 68 க்கும் மேற்பட்ட அரசு பள்ளி மாணவர்கள் 150 மேற்பட்ட அறிவியல் மாதிரிகளை கொண்டு வந்து அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தினர், அதனை தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசாக 7000 ரூபாய், இரண்டாம் பரிசாக ரூ.5,000, மூன்றாம் பரிசாக 3000 வழங்கி மாணவர்களை சிறப்பிக்கப்பட்டுள்ளனர், இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, ISRO Dr.இளங்கோவன், SEDT, HCL Foundation மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினார்.

# டங்ஸ்டன் ஏலம் ரத்து: முதல்வர் ஸ்டாலினுக்கு அரிட்டாப்பட்டியில் பாராட்டு விழா நடத்த திட்டம்

மதுரை, ஜன.26

டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் உடனடியாக பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசு ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வைத்த முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அரிட்டாப்பட்டி, வல்லாளப்பட்டி, தெற்கு தெரு, மீனாட்சிப் பகுதியை சேர்ந்த ஊரின் முக்கிய நபர்கள் நாளை (ஞாயிற்றுக்கிழமை) பாராட்டு விழா நடத்த திட்டமிட்டுள்ளனர். அவர்கள் இன்று காலை வணிக வரித் துறை அமைச்சரும், மதுரை புறநகர் மாவட்டச் செயலாளருமான பி.மூர்த்தி தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்தனர்.






அப்போது மேலூர் பகுதி விவசாயிகள், நாளை நடக்கும் பாராட்டு விழாக்கு வருமாறு நேரில் அழைப்பு விடுத்தனர். அவர்கள் அழைப்பை ஏற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை காலை மதுரை வருகிறார். காலை சென்னையில் நடக்கும் குடியரசு தினவிழாவில் பங்கேற்றுவிட்டு தனி விமானம் மூலம், மதுரை வருகிறார். அவர் அரிட்டாப்பட்டி, வல்லாளப்பட்டி மக்கள், விவசாயிகளை சந்திக்கிறார்.

இது குறித்து ‘டங்ஸ்டன்’ போராட்டக்குழுவினர் கூறுகையில், ‘‘டங்ஸ்டன் சுரங்க ஏல ரத்துக்கு தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து கட்சிகளுமே பொது மக்களுடன் இணைந்து குரல் கொடுத்தனர். முதல்வர் சட்டமன்றத்தில் தனித்தீர்மானம் கொண்டு வந்ததோடு, இந்தத் திட்டம் வந்தால் பதவியை ராஜனமா செய்வேன் என்று தெரிவித்ததால் இந்தத் திட்டம் ரத்துக்கு அவரது இந்த நெருக்கடியும் முக்கிய காரணம். அதனால், அவருக்கு, போராட்டத்தில் பங்கேற்ற ஊர் பெரியவர்கள், உள்ளூர் திமுகவினர் வழிகாட்டுதலோடு பாராட்டு விழா நடத்துகிறார்கள்,’’ என்றார்.

மதுரை மாவட்ட உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, ‘‘பாராட்டு விழா அரிட்டாப்பட்டியிலா அல்லது வல்லாளப்பட்டியிலா என்பது தற்போது வரை முடிவு செய்யப்படவில்லை. அமைச்சர் பி. மூர்த்தி சொன்னபிறகுதான், அதற்கான ஏற்பாடுகள் எந்த இடத்தில் தொடங்குவது என்பது தெரிய வரும்’’ என்றார்.

பின்புலம் என்ன? மதுரை அருகே தொல்லியல் பாரம்பரிய வரலாற்று சிறப்பு மிக்க கிராமமாக அரிட்டாப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்கள் திகழ்கின்றன. இந்த கிராமங்களில் 4,980 ஏக்கர் நிலங்களில் ‘டங்ஸ்டன்’ கனிமம் வெட்டி எடுப்பதற்காக தூத்துக்குடி வேதாந்தா நிறுவனத்துக்கு மத்திய அரசு கடந்த நவ.7ம் தேதி ஏலம் மூலமாக அனுமதி வழங்கியிருந்தது. இதற்கு இப்பகுதி மக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சமூக ஆர்வலர்கள், விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு போராட்டங்களை நடத்த தொடங்கினர்.

கடந்த ஜனவரி 7ம் தேதி மேலூர் அருகே சிட்டம்பட்டி சுங்கச்சாவடியிலிருந்து சுமார் 15 கி.மீ நடைபயணமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மதுரை வந்த போராட்டக் குழுவினர் தல்லாகுளம் தபால் நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் தன்னெழுச்சியாக நடைபெற்று தமிழகம் முழுவதும் மக்களின் கவனத்தை ஈர்த்தது.

இதையடுத்து, தமிழக பாஜக கட்சி உள்பட அனைத்து அரசியல் கட்சிகளும், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களுக்கு ஆதரவாக மத்திய அரசு, ‘டங்கஸ்டன்’ சுரங்கம் ஏலத்தை ரத்து செய்ய வலியுறுத்தினர். தமிழக சட்டமன்றத்தில் கடந்த டிசம்பர் 9ஆம் தேதி டங்ஸ்டன் சுரங்க அனுமதிக்கு எதிராக அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் அரசு தனி தீர்மானம் நிறைவேற்றியது. அதில், அதிமுக பொதுச் செயலாளர் கே.பழனிசாமிக்கும், முதல்வர் ஸ்டாலினுக்கும் நேருக்கு நேர் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு, ஒரு கட்டத்தில் முதல்வர், நான் முதல்வராக இருக்கும் வரையில் இந்த திட்டம் வராது, அப்படி என்னை மீறி வந்தால் முதல்வர் பதவியில் இருக்க மாட்டேன் என சவால் விடுத்திருந்தார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையும் மேலூர் பகுதிக்கு நேரடியாக வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களையும், விவசாயிகளையும் சந்தித்து, மத்திய அரசு டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்யும், அதற்கு நான் பொறுப்பு, பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள் என்று வாக்குறுதி கொடுத்தார். அதற்கு, போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், மத்திய சுரங்கத் துறை அமைச்சர் கிஷன்ரெட்டி இத்திட்டத்தை ரத்து செய்து, அதற்கு அரசாணை வெளியிட்டால் மட்டுமே போராட்டத்தை வாபஸ் பெறுவோம் என்றனர்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை திட்டமிட்டப்படி, மேலூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் 8 பேரை அழைத்து டெல்லி சென்று, மத்திய அமைச்சர் கிஷன்ரெட்டியை சந்திக்க வைத்து பேச வைத்தார். பொதுமக்கள் போராட்டம், விவசாயிகள் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மத்திய அரசு உடனடியாக டங்ஸ்டன் சுரங்க ஏல அனுமதியை முழுவதுமாக ரத்து செய்துள்ளதாக அறிவித்தது. மத்திய அரசின் இந்த அறிவிப்பு மூலம் நவம்பர் முதல் ஜனவரி மாதம் வரை 3 மாதங்கள் நீடித்த தொடர் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.இதனால், மேலூர் பகுதி கிராம மக்கள், விவசாயிகள் உட்பட பல்வேறு தரப்பினரும் நிம்மதி அடைந்துள்ளனர். மத்திய அரசின் அறிவிப்பை அரிட்டாபட்டி மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.


# கம்பத்தில் கஞ்சா வியாபாரிகள் வீட்டில் சோதனை நடத்தி ரூ.39 ஆயிரம் அபேஸ் செய்த போலி போலீசார்


கம்பம், ஜன. 26:

கம்பத்தில் கஞ்சா வியாபாரிகள் வீட் டில் போலியான போலீ சார் சோதனை நடத்திய சம்பவம் பெரும் பரப ரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கம்பம் குரங் குமாயன் தெருவைச் சேர்ந்தவர் ஜெயகுமார் (22). இவர் கம் பம் வடக்கு போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதில் நானும் எனது தாயார் லதாவும் கடந்த சில ஆண் டுகளுக்கு முன்பு கஞ்சாவிற் பனை செய்ததாக கம்பம் வடக்கு போலீஸ் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது. இதையடுத்து மதுரை கோர்டில் வழக்கு நடத்தி வருகிறோம். இந்நிலையில் கடந்த 20ம் தேதி இரவு 7 மணியளவில் டுவீலரில் காக்கி பேண்ட் அணிந்த பெண் ஒருவரும், சாதாரண டீசர்ட், பேண்ட் அணிந்த பெண் ஒருவரும், 19 வயது மதிப்புடைய இளைஞர் ஒருவரும்,

எனது வீட்டிற்கு வந்து கஞ்சா இருக்கிறதா என கேட்டனர். அப்போது நான் தற்போது கஞ்சா விற்பது இல்லை என கூறினேன். அதற்கு, நாங்கள் 3 பேரும்




மதுரை ஸ்பெசல் போலீஸ் என கூறினர். பின்னர், நீங்கள் கஞ்சா விற்பது எங்களுக்கு தெரி யும் எனவே உங்கள் மீது வழக்கு போடவா இல் லையென்றால் கஞ்சாவிற்கு அபராதம் போடவா என மிரட்டினர். இதனால் நான் பயந்து கொண்டு அவர்கள் கேட்ட ரூ.10 ஆயிரத்தை

வாங்கினர். அப்போது அவர்களி டம் பெயர் கேட்ட போது அன்னம், விஜயா, முத்துப் பாண்டி என கூறி சென்றனர். இதற்கிடையில் எங்களை மிரட்டியது போல் எங்களது உறவினர்களான அஜித் என்பவரிடம் ரூ.10 ஆயிரம், நந்தினி என்பவரி டம் ரூ.12 ஆயிரம், வீரமணி என்பவரிடம் ரூ.7 ஆயிரம் என வாங்கி சென்றுள்ளனர். இந்நிலையில் மீண்டும் நேற்று எனது தாயார் லதாவிடம் போன் செய்து பணம் கேட்டுள்ளனர் என தெரிவித்திருந்தார்.

ஜெயகுமார் கம்பம் வடக்கு போலீஸ் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் கம்பம் குரங்குமாயன் தெருவில் சுற்றி திரிந்த அன்னம், விஜயா, முத்துப் பாண்டி ஆகியோரை கம்பம் வடக்கு போலீசார் சுற்றி வளைத்து பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் அவர் கள் போலீஸ் இல்லை என்பது தெரிய வந்தது. இதையடுத்து அவர்களை கம்பம் வடக்கு போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வரு கின்றனர். மேலும் இவர்களுக்கு கஞ்சா விற்பனை செய்பவர்கள் பற்றிய விவரம், மற்றும் அவர்களது முகவரி எப்படி தெரிந்தது என்பது குறித்தும், விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தாம்பரம் மாநகர மேற்கு பகுதி சார்பில் பாகம் வாரியாக புதிய கிளை நிர்வாகிகள் அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம்

தாம்பரம் ஜன26

முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தாம்பரம் மாநகர மேற்கு பகுதி கழக 32வது, 51வது வடக்கு மாவட்ட தெற்கு வட்டக் கழக சார்பில் பாகவாரியாக புதிய கிளைக் கழக நிர்வாகிகள் அமைப்பதற்கான திருநீர்மலை ரோடுரமேஷ் நகர் பகுதி வணிகர் சங்க மினி ஹால் தனியார் திருமண மண்டபத்தில் தாம்பரம் மாநகர மேற்கு பகுதி கழகச் செயலாளர் ஏ கோபிநாத் தலைமையில் 32 வது வட்டக் கழக செயலாளர் ஜெ.ஜெயக்குமார்,



பொறுப்பாளர் ஜே.மாரி, 51வது தெற்கு வட்ட கழக செயலாளர் ஜெகஜீவன் ராம், 51வது வடக்கு வட்ட கழக செயலாளர் டாக்டர் சுரேஷ் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் டி.கே.எம் சின்னையா, ஆகியோர் கலந்து கொண்டு பாகம் வாரியாக புதிய கிளை நிர்வாகிகள் அமைப்பதற்கான ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர மத்திய பகுதி கழக செயலாளர் எல்.ஆர்.செழியன், கிழக்கு பகுதி செயலாளர் எம்.கூத்தன், மாவட்ட கழக பொருளாளர் பி.கே.பரசுராமன், பொதுக் குழு உறுப்பினர் தா.மு.துரைவேல் மற்றும் மாவட்ட நகர வட்டக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் ஒரு நாள் கருத்தரங்கு




வேலூர் ஜன.26

வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் சட்டக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு பயிற்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்தி நகரில், வேலூர் அரசு சட்டக் கல்லூரி ஒரு நாள் கருத்தரங்கு பயிற்சி, வழக்காடு நடைமுறைகளில் உள்ள சவால்களை எதிர் கொள்ளுதல் மற்றும் புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்த சட்டக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு பயிற்சியை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் பயிற்சியின் துவக்கத்தை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சட்டக் கல்லூரி முதல்வர் முனைவர் கே.லதா, தமிழ்நாடு சட்டக் கல்வி இயக்குநர் முனைவர் ஜெ.விஜயலட்சுமி, சட்டக் கல்லூரி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டங்ஸ்டன் திட்டத்தை அரசியலாக்க விரும்பவில்லை பாஜக மாநில செயலாளர் ராம சீனிவாசன் பேட்டி



மதுரை, ஜன.26

மதுரை விமான நிலைத்தில் செய்தியாளர்களை சந்தித்த பாஜக மாநில பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன் டங்ஸ்டன் பிரச்சனை முடிவுக்கு வந்திருக்கிறது. மத்திய அமைச்சர் மூலமாக டங்ஸ்டன் சுரங்கத்திற்கு கொடுத்த அனுமதி ஏலம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

இந்த முடிவுக்கு அனைவரும் வரவேற்பு தெரிகின்றனர். எந்தெந்த மாநிலங்களில் கனிம வளங்கள் உள்ளது என நாடு முழுவதும் ஜியாலஜிகல் நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது.

டங்ஸ்டன் அரியவகை தாது பொருள். அதை தற்போது வெளிநாட்டிலிருந்து தான் இறக்குமதி செய்து வருகிறோம் தமிழ்நாட்டில் இருப்பதால்தான் தமிழக அரசிடம் பேசி ஏலம் விட தயாரானபோது மாநில அரசு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

விவசாயிகளுடன் கலந்தாலோசித்தபோதுதான் இங்கிருக்கும் பாதிப்புகள் எங்களுக்கு தெரியவந்தது.

மக்கள் தெரிவித்த கருத்துக்களை அமைச்சர் ஏற்றுக் கொண்டு விவசாயிகளுக்கு ஆதரவாக இந்த அரசு இருக்கும். இதற்காக மோடியிடம் பேசி டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்தார் மத்திய அமைச்சர்.

டங்ஸ்டன் போராட்டத்தை திசை திருப்ப முயன்றும் பொது மக்கள் உறுதியுடன் போராடினர்.

டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்ததை தொடர்ந்து டெல்லி சென்ற விவசாயிகள் கிஷன் ரெட்டிக்கு அரிட்டாபட்டி வர விவசாயிகள் அழைப்பு விடுத்ததாகவும் அவரும் வருவதாக ஒத்துக் கொண்டுள்ளாதாக தெரிவித்தார். இதற்காக பாடுபட்ட அண்ணாமலை, எல்.முருகன் உள்ளிட்டோருக்கும் எல்லாவற்றிற்கும் காரணமான பிரதமர் மோடிக்கும் நன்றிதெரிவித்தார்

தமிழக அரசின் நடவடிக்கையால்தான் மோடி அரசு பணிந்து திட்டத்தை ரத்து செய்துவிட்டது என தமிழக முதல்வர் தெரிவித்தது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு?

ராம.சீனிவாசன் இந்த விவகாரத்தை நான் அரசியலாக பார்க்கவில்லை

அதற்காக அனைத்து கட்சியினருமே போராடி உள்ளனர். ஆனால் இந்த விஷயத்தை அரசியலாக இப்போது பேச விரும்பவில்லை.

அதற்காக தனியாக நான் பதில் கூறுகிறேன் என்றார்.

# வேலூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் ஆட்சியர் தலைமையில் தேசிய வாக்காளர் தின ஊறுதிமொழி




வேலூர் ஜன.26

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஜனவரி 25 தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி தலைமையில் வாக்காளர் தின உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வயது முதிர்ந்த முதியோர்கள் மற்றும் முதல் முறை வாக்களிக்க தயாரான வாக்காளர்களை கௌரவிக்கப்பட்டு வாக்களிப்பதின் முக்கியத்துவம் குறித்து அனைவருக்கும் நீங்கள் எடுத்துரைக்க வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் டி.ஆர்.ஒ. மாலதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்தையன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) முருகன், தேர்தல் வட்டாட்சியர் சத்தியமூர்த்தி, வாக்காளர் விழிப்புணர்வு குறித்து ஓவியப் போட்டி மற்றும் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிப் பெற்ற மாணவமாணவியர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# ரூ.500 கோடி மோசடி செய்த வேலூர் காட்பாடியை சேர்ந்த பெண் சேலத்தில்காவல் துறையினரால் கைது

## பண மோசடியில் ஈடுபட்ட 12 பேரும் சிக்கினர்





வேலூர் ஜன.26

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி பகுதியை சேர்ந்தவர் விஜயபானு, புனித அன்னை தெரசா மனிதநேய அறக்கட்டளையை ஆரம்பித்து காட்பாடி, சித்தூர் பகுதியில் பலருக்கு லோன் வாங்கி தருகிறேன், பணத்தை இரட்டிப்பு செய்து ஏமாற்றி வந்ததாக கூறுகின்றனர்.

இவர் சமீபத்தில் ஏழை எளிய வருக்கு அன்னதானம் சுமார் தொடர்ச்சியாக தினமும் 150 நாட்களுக்கு மேல் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கும் அரிசி, பருப்பு, சேலைகள் என பல்வேறு நல திட்டங்களிலும் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சேலம் அம்மாபேட்டை ஆத்தூர் மெயின்ரோட்டில் ஒரு திருமண மண்டபத்தை வாடகை எடுத்து ரூ.1 லட்சம் டெபாசிட் செய்தால், மாதம்தோறும் ரூ.10 ஆயிரம் கிடைக்கும், பிறகு 7 மாதம் கழித்து ரூ.1 லட்சம் மீண்டும் கொடுக்கப்படும் என்று கூறி பொதுமக்களை ஏமாற்றி, ஆசை வார்த்தைகளில் விழ வைத்து, அப்பகுதியை சேர்ந்த பலபேரிடம் கடந்த 3 ஆண்டுகளாக ஆட்களை வைத்து அதிகமாக வசூலில் ஈடுபட்டு ரூ.500 கோடி வரை வசூல் செய்து உள்ளனர்.

சேலம் மண்டபத்தில் சிலருக்கு பணம் கொடுத்தல், பணம் வாங்கல் நிகழ்வு நடந்து கொண்டு இருப்பதாக சேலம் உளவு பிரிவு காவல்துறைக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் டி.எஸ்.பி வெங்கடேசன் தலைமையில் 10 பேர் அங்கு சென்றனர். அதை வீடியோ எடுத்தனர். அதை பார்த்த கும்பல் காவலர்களை தாக்கினர்.

இதுகுறித்து தகவல் அறிந்த மாநகர காவல்துறையினர் 200க்கும் மேற்பட்டோர் விரைந்து சென்று காட்பாடியை சேர்ந்த அறக்கட்டளை தலைவர் விஜயபானு (வயது 48) மற்றும் சேலம் பகுதியை சேர்ந் ஜெயபிரதா (வயது 47), பாஸ்கர் (வயது 49) மதமேரி (வயது 37) மைக்கேல் (வயது 34) ஆகியோரை கைது செய்து தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

சுமார் 2 கோடி ரூபாய் ரொக்கத்தையும் காவல்துறையினர் கைப்பற்றி ஒப்படைத்துள்ளனர்.

இதே பிரச்னைக்காக விஜயபானு, ஆந்திர மாநிலம் சித்தூரில் கைது செய்யப்பட்டு பின்பு ஜாமினில் வெளியில் வந்து தொடர்ந்து இதுப்போன்று குழுவுடன் சேர்ந்து ஏமாற்றி வருகிறார்.

அரசு அங்கீகாரம் இல்லாமல் பொதுமக்களிடம் முதலீடு தொகை பெற்று, இரட்டிப்பு லாபம் என விளம்பரம் செய்தது, எந்தவித முதலீடு யுக்தி கரும் இல்லாமல் பணம் வசூலித்தது, உட்பட்ட குற்றங்களுக்காக, சம் மந்தப்பட்ட நிறுவன நிர்வாகிகள் உள்ளிட்ட 12 பேர் கைது செய்து திருமண மண்டபத்தில் குவித்து வைத்திருந்த ரூ.12.65 கோடி, 2.5 கிலோ தங்கம், 1000 அரிசி கிலோ மூட்டைகள் பறிமுதல் செய்துள்ளனர். வருவாய்துறை, காவல்துறையினர் மேற்பார்வையில் 7 மணிநேரம் 6 பணம் எண்ணும் மிஷினில் எண்ணினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலூர் மாநகராட்சி சுகாதார துறை சிவகுமாருக்கு சிறந்த சுகாதார அலுவலர் விருது வழங்கி பாராட்டு



வேலூர், ஜன.26

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி விஜடி பல்கலைக்கழகத்தில் குடியரசு தினவிழா முன்னிட்டு ராஜ்டிவி மற்றும் விஜடி சார்பில் சிறப்பு பட்டிமன்றம் வி ஐ டி துணைத் தலைவர் சங்கர் தலைமையிலும், உதவி துணை தலைவர் காதம்பரி முன்னிலையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக தனியார் தொலைக்கட்சி புகழ் மதுரை முத்து பட்டிமன்ற நடுவராக பங் கேற்றார். இதில் வேலூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் சுகாதார அலுவலர் சிவக்குமாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து, சிறந்த சுகாதார அலுவலர் விருது வழங்கப்பட்டு வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

# சின்னமனூர், ஓடைப்பட்டி பகுதிகளில் உணவு பாதுகாப்புத்துறை ஆய்வு! அபராதம், சீல் வைப்பு



தேனி, ஜன.26

தேனி மாவட்டத்தை போதை இல்லாத மாவட்டமாக மாற்ற வேண்டும் என்ற மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பெயரில், மாவட்ட உணவு பாதுகாப்பு துறை சார்பாக மாவட்டம் முழுவதும் போதை பொருட்கள் பறிமுதல் செய்யும் விடயத்தில் சல்லடையிட்டு தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, சின்னமனூர் மற்றும் ஓடைப்பட்டி வட்டாரத்திற்கு உட்பட்ட கிராமப் பகுதிகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் வந்ததை அடுத்து சின்னமனூர் வட்டார உணவு பாதுகாப்பு துறை அலுவலர் சுரேஷ் கண்ணன் தீவிர ஆய்வு மேற்கொண்டு வந்தார்.

தீவிர ஆய்வின் தொடர்ச்சியாக ஓடைப்பட்டி, கீழப்பூலானந்தபுரம், புத்தம்பட்டி (எ) முத்துகிருஷ்ணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வந்த மளிகை மற்றும் பெட்டிக் கடைகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கூல் லிப், கணேஷ் புகையிலை போன்ற போதை பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததை அறிந்து அவற்றை பறிமுதல் செய்து மேற்கண்ட 3 கடைகளுக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு, கடைகளுக்கு சீல் வைத்து அதன் நகலை கடையின் முகப்பு பகுதியில் ஒட்டி விழிப்புணர்வு மற்றும் எச்சரிக்கை நடவடிக்கையானது சின்னமனூர் வட்டார உணவு பாதுகாப்பு துறை அலுவலரால் மேற்கொள்ளப்பட்டது. ஓடைப்பட்டி காவல்துறை உணவு பாதுகாப்பு துறை அலுவலருக்கு சிறப்பாக ஒத்துழைப்பு கொடுத்தது.

சின்னமனூர் நகரம் மற்றும் தாய் கிராமப் பகுதிகளில் போதை பொருள் ஒழிப்பு வேட்டை மேலும் தொடர வேண்டும் என சமூக நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ் நிலைய ரவுண்டானா முன்பு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது. இதற்கு மாவட்ட செயலாளர் தமிழ்முகம் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் மயில்ராஜ், முத்துமாணிக்கம், நகர செயலாளர் ராமர், துணை செயலாளர் பூ முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து தியாகிகளின் உருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தபட்டது. இதில் கவுன்சிலர் இஸ்மாயில் உள்ளிட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஜனவரி 25 தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி தலைமையில் வாக்காளர் தின உறுதிமொழி ஏற்று, வாக்காளர் விழிப்புணர்வு குறித்த பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ மாணவியர்களை பாராட்டி பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் டி.ஆர்.ஒ. மாலதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்தையன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) முருகன், தேர்தல் வட்டாட்சியர் சத்தியமூர்த்தி மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## அரசனூர் பொன்னையா ராமஜெயம் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி சட்டக் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா




சிவகங்கை ஜன26.

சிவகங்கை மாவட்டம் பூவந்தி அருகே உள்ள அரசனூர் பொன்னையா ராமஜெயம் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி சட்டக் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இதில் 2017 முதல் 2023 வரை தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு 535 மாணவ மாணவிகள் பட்டம் பெற்றனர் இதில் 8 மாணவர்கள் தங்கப்பதக்கங்கள் பெற்றனர். பின்னர் மாணவ மாணவிகள் உறுதி மொழியும் ஏற்றுக்கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி வெங்கட ஹர்ஷா வரதன் ரெட்டி கல்லூரி தாளாளர் டாக்டர் எம் பொன்னையா நாகேஸ்வரன் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினர்.

பட்டமளிப்பு விழாவில் அனைத்து மாணவர்கள் மாணவிகள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் கல்லூரி ஆசிரியர்கள், திரளாக கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட பொய்யாவயல் அரசு உயர்நிலைப்பள்ளியில், ஒன்பதாம் வகுப்பு பயின்று வந்த புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், பத்தரசன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் சக்தி சோமையா (வயது 14) பள்ளியின் மின்சார வயர்களில் ஏற்பட்ட மின்சார கசிவினால், எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், காரைக்குடி புதிய அரசு தலைமை மருத்துவமனைக்கு (சூரக்குடி) நேரில் சென்று, மேற்கண்ட மாணவனின் குடும்பத்தினரிடம் ரூ.5.00 இலட்சத்திற்கான முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கான காசோலையினை வழங்கியதுடன், தனது சொந்த நிதியிலிருந்தும் ரூ.02.00 இலட்சம் நிதியுதவியினையும் வழங்கி, ஆறுதல் கூறினார்.




தென்காசி மாவட்டத்தில் 15 வது தேசிய வாக்காளர் தினம் 2025 ஐ முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், நற்சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

## சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு




சிவகங்கை, ஜன.26

சிவகங்கை மாவட்டம், 15வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள், சுய உதவிக்குழுவினர்களிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பேசுகையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டம் முழுவதும் பல்வேறுப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்ந்து வருகிறது. 18 வயது பூர்த்தியடைந்த ஒவ்வொருவரும் வாக்காளராக தங்களைப் பதிவு செய்து, ஜனநாயக கடமையாற்றி, வலிமை மிக்க இந்தியாவிற்கு வலுச்சேர்க்கும் வகையில் இருந்திட வேண்டும் .

மேலும், தேசிய வாக்காளர் தினமானது, வாக்குச்சாவடி அளவில், சட்டமன்றத் தொகுதி அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் மற்றும் தேசிய அளவில் என பல நிலைகளில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதுமட்டுமன்றி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், சுய உதவிக்குழுவினர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, எதிர்கால இந்தியாவின் தூண்களாக விளங்கும் இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. அந்த வகையில், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களை கொண்டு, சிவகங்கை நகர் பகுதியில் விழிப்புணர்வு பேரணியானது வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, சிவகங்கை நகர் அரண்மனை வாசலில் இருந்து முக்கிய வீதிகள் வழியாக சென்று வட்டாட்சியர் அலுவலகம் வரை சென்று நிறைவு பெற்றது.

அதேபோன்று, தேவகோட்டை பகுதியில் தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் தொடங்கி உதவி ஆட்சியர் அலுவலகம் வரையிலும், காரைக்குடி பகுதியில் வட்டாட்சியர் அலுவலகப் பணியாளர்களைக் கொண்டு வாகன அணிவகுப்பும், காளையார் கோவில் சொர்ண காளீஸ்வர் ஆலயத்திலிருந்து வட்டாட்சியர் அலுவலகம் வரையும், திருப்புவனம் பூமாரி அம்மன் கோவிலிலிருந்து வட்டாட்சியர் அலுவலகம் வரையும், சிங்கம்புணரி பேரூராட்சி அலுவலத்திலிருந்து பேருந்து நிலையம் வரை தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களை கொண்டு, விழிப்புணர்வு பேரணியானது நடத்தப்பட்டது. மேலும், காரைக்குடி வித்யாகிரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளைக் கொண்டு மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைத்து, தேர்தல் விழிப்புணர்வு நாடகமும் நடத்தப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்த இணைந்து செயல் புரிந்த அழகப்பா அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர் மற்றும் 19 ழிஷிஷி மாணாக்கர்களுக்கும், சிறப்பாக பணிபுரிந்து 13 வாக்குச்சாவடி மேற்பார்வையாளர்கள், 13 வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் 4 Data Entry Operator உட்பட 89 நபர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், 50 நபர்களுக்கு சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,இ.ஆ.ப, வழங்கினார்.

அதேபோன்று, தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு ரங்கோலிப் போட்டியில் பங்கேற்ற மாணவிகளுக்கு தேவகோட்டை சார் ஆட்சியர் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. எஸ்.செல்வசுரபி , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துக்கழுவன், உதவி ஆணையர் (கலால்) ரெங்கநாதன், வட்டாட்சியர் (தேர்தல்) மேசியதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த துப்புரவு பணி முகாம்



கன்னியாகுமரி, ஜன.26

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்த்தல் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாபெரும் நெகிழி சேகரிப்பு முகாம் மற்றும் விழிப்புணர்வு பேரணி இன்று 25.01.2025 கன்னியாகுமரியில் நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர். அழகுமீனா, இ.ஆ.ப., , மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், செயல் அலுவலர், கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சி, உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பசுமை தோழர், வட்டார வளர்ச்சி அலுவலர், அகஸ்தீஸ்வரம், சுகாதார அலுவலர், பேரூராட்சிக்குட்பட்ட சுகாதார பணியாளர்கள் உள்ளிட்ட 250 பேர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் முதலாவதாக கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகத்திலிருந்து மாபெரும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்று திரிவேணி சங்கமம் வந்தடைந்தது. பேரணியின்போது ஒர முறை தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் மாற்று பொருட்கள் மற்றும் நெகிழியால் ஏற்படும் தீங்கு குறித்து ஆட்டோ மூலம் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் திரிவேணி சங்கமத்தில் நெகிழி பயன்பாடு தடை குறித்து உறுதி மொழி ஏற்கப்பட்டு சுகாதார பணியாளர்கள் குழுவாக பிரிக்கப்பட்டு கண்காணிப்பாளர் தலைமையில் கடற்கரை பகுதிகளை (சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை) சுத்தம் செய்வது மேற்கொள்ளப்பட்டது.

இதில் கடற்கரை பகுதியில் இருந்த நெகிழி கழிவுகள், முட்புதர்கள் ஆகியவை அகற்றப்பட்டன.

சுமார் 680 Kg அளவிலான நெகிழிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு கன்னியாகுமரி பேரூராட்சிக்குட்பட்ட வளம் மீட்பு பூங்காவில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நெகிழி கழிவுகளை இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம், திருநெல்வேலிக்கு அனுப்பும் பணி பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மதுரை மாநகராட்சி சார்பில் வாக்காளர் தினம் விழிப்புணர்வு பேரணி




மதுரை, ஜன.26


மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வக்புவாரிய கல்லூரியில் வாக்காளர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மதுரை மாநகராட்சி துணை ஆணையாளர் க.சிவக்குமார் இன்று (25.01.2025) துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 15வது தேதிய வாக்காளர் தினம் ஜனவரி 25ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. வாக்காளர் தினத்தினை முன்னிட்டு பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட ஐந்து மண்டல பகுதிகளிலும் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மதுரை மாநகராட்சி 191 மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வக்பு வாரிய கல்லூரியில் தேசிய வாக்காளர் தின பேரணியை மாநகராட்சி துணை ஆணையாளர் கொடியசைத்து துவக்கி வைத்தார். வாக்காளர் தின பேரணி மற்றும் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை துணை ஆணையாளர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி ஆணையாளர் கோபு, கல்லூரி முதல்வர் முனைவர். ஷாஜீலி இப்ராஹிம், தேர்தல் துணை வட்டாட்சியர் பி.வீரக்குமார், உதவிப் பொறியாளர் கருப்பையா, கல்லூரி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக்கல்லூரியின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.




குடியரசு தினவிழாவினை முன்னிட்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மூவர்ணக்கொடி மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161